பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
29 06 2025 7 15
ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. அரசியலமைப்புச் சட்டத்தின் ஆன்மாவாக அதன் முகவுரை திகழ்கிறது என்று குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.

2. பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனந்திறந்து பேசும் மன்கி பாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

3. சமூக பாதுகாப்பு திட்டங்களை செயல்படுத்துவதில் உலகளவில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. பாகிஸ்தானில் நடத்தப்பட்ட தற்கொலைப் படைத் தாக்குதலில் அந்நாட்டு ராணுவ வீரர்கள் 16 பேர் கொல்லப்பட்டனர்.

5. அமெரிக்க ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டி, தன்வீ ஷர்மா ஆகியோர் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

*<<<<>>>>*

அரசியலமைப்புச் சட்டத்தின் முகவுரைகள் அதன் ஆன்மாவாக திகழ்கிறது என்று குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசிய அவர், அரசியலமைப்புச் சட்டம் அதன் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டது என்று கூறினார்.

அரசியலமைப்புச் சட்டத்தின் முகவுரையில் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள் நாட்டின் மாண்பை குறைத்து மதிப்பிடுவதாக இருக்கும் என்று அவர் தெரிவித்தார்.

சமகாலத்திற்கு பொருந்தக் கூடிய வகையில் அரசியலமைப்புச் சட்டத்தை டாக்டர் வி.ஆர். ஆம்பேத்கர் உருவாக்கியுள்ளதாக திரு. ஜக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.

*<<<<>>>>*

தேசிய மஞ்சள் வாரியத்தை உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று தொடங்கி வைக்கிறார்.

தெலங்கானா மாநிலம் நிஸாமாபாதில் நடைபெறும் நிகழ்ச்சியில் வாரியத்திற்கான அதிகாரபூர்வ இலட்சினையையும் அவர் வெளியிடுகிறார்.

விவசாயிகளுக்கான புதுமைக் கண்டுபிடிப்புகளின் சகாப்தமாகவும், உலக அளவில் வேளாண் விளைபொருட்களுக்கான போட்டியை எதிர்கொள்ளும் வகையிலும் இந்த இலட்சினை வடிவமைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பின்னர் நடைபெறும் விவசாயிகள் பேரணியில் திரு. அமித் ஷா கலந்துகொண்டு உரையாற்றுகிறார்.

<<<>>>

தேசிய புள்ளியியல் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இத்தினத்தை ஒட்டி நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

புதுதில்லியில் நடைபெறும் புள்ளியியல் தின விழாவை மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத்துறை அமைச்சர் திரு. ராவ் இந்தர்ஜித் சிங் தொடங்கி வைக்கிறார்.

புள்ளியியல் மற்றும் பொருளாதார திட்டத்துறைகளில் சிறந்து விளங்கிய பேராசிரியர் **Prasanta Chandra Mahalanobis** பிறந்த தினத்தை நினைவுகூறும் வகையில் ஆண்டுதோறும் இந்த தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

புள்ளியியல் துறையின் பங்களிப்பை எடுத்துரைக்கும் வகையில் ‘75 ஆண்டுகளில் தேசிய மாதிரி ஆய்வுகள்’ என்ற கருப்பொருளுடன் இந்த ஆண்டுக்கான புள்ளியியல் தினம் கொண்டாடப்படுகிறது.

<<<>>>

சமூக பாதுகாப்பு திட்டத்தை செயல்படுத்துவதில் உலகளவில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த 10 ஆண்டுகளில் நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் சமூக பாதுகாப்பு திட்டங்களின் பயன்கள் 64 புள்ளி 3 சதவீத மக்களை சென்றடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆதார் எண்ணை அடிப்படையாகக் கொண்டு சமூக பாதுகாப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

நாட்டில் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதம் வெகுவாக குறைந்துள்ளது என்று மத்திய அரசு கூறியுள்ளது.

இது தொடர்பாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், நாடு முழுவதும் செயல்படுத்தப்பட்டு வரும் தடுப்பூசி திட்டம் காரணமாக குழந்தைகளின் இறப்பு விகிதம் குறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் குழந்தைகளின் இறப்பு விகிதம் 78 சதவீதம் குறைந்துள்ளதாக ஐ.நா. சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

பீஹாரில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலில் 62 புள்ளி 41 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக மாநில தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

ஆறு நகர்ப் பஞ்சாயத்து அமைப்புகளுக்கான பொதுத் தேர்தல், மற்றும் 36 உள்ளாட்சி அமைப்புகளுக்கான் இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு சுமுகமாக நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

நாட்டிலேயே முதன்முறையாக மின்னணு முறையில் வாக்களிக்கும் நடைமுறை இந்த தேர்தலில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

<<<<>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனந்திறந்து பேசும் மன்கி பாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

இது இரவு 8 மணிக்கு மறு ஒலிபரப்பும் செய்யப்படும்.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<>>>>

பாகிஸ்தானில் நடந்த தற்கொலைப் படைத் தாக்குதலில் அந்நாட்டு ராணுவ வீரர்கள் 16 பேர் கொல்லப்பட்டனர். 29 பேர் காயமடைந்தனர்.

அந்நாட்டின் வடமேற்குப் பகுதியில் ராணுவத்தினரின் வாகனத்தைக் குறிவைத்து வெடிபொருட்கள் நிரப்பப்பட்ட வாகனத்தின் மூலம் இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த தாக்குதல் சம்பவத்தை ஹஃபிஸ் குல் பஹதுர் என்ற ஆயுதக் குழு நடத்தியதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

<<<<>>>>

வடகிழக்கு மாநிலங்களில் தென்மேற்கு பருவமழை அடுத்த 2 நாட்களில் மேலும் தீவிரமடையும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பஞ்சாப் மாநிலத்தின் ஓரிரு இடங்களில் நேற்று இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ததாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே ஹிமாச்சலப்பிரதேசத்தில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கனமழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மழை மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக இதுவரை 17 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 300 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துக்கள் சேதமடைந்துள்ளதாக அவர் மேலும் கூறுகிறார்.

இந்நிலையில் அடுத்த 2 நாட்களுக்கு கன முதல் அதிகன மழைக்கான ஆரஞ்சு நிற எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

<<<<>>>>

காஸாவில் இஸ்ரேல் நேற்றிரவு நடத்திய வான்வழித் தாக்குதலில் 49 பேர் உயிரிழந்துள்ளனர்.

பாலஸ்தீன மைதானம் அருகே நடத்தப்பட்ட தாக்குதலில் 12 பேரும், குடியிருப்பு பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலில் 8 பேரும் உயிரிழந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

பாகிஸ்தானில் உள்ள வஸிரிஸ்தானில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு இந்திய ராணுவத்தின் மீது பழிசுமத்தி அந்நாட்டு அரசு வெளியிட்டுள்ள அறிக்கையை இந்தியா நிராகரித்துள்ளது.

இது தொடர்பாக வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், பாகிஸ்தானின் இந்த செயலுக்கு கண்டனம் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

அமெரிக்க ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டி, தன்வீ ஷர்மா ஆகியோர் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் ஆயுஷ் ஷெட்டி, 21-13, 21-15, 21-14 என்ற செட் கணக்கில் தைவானின் **Tien Chen**-ஐ வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் தன்வீ ஷர்மா 21-14, 21-16 என்ற செட் கணக்கில் யுக்ரைனின் **Polina Buhrova**-ஐ வென்றார்.

<<<<>>>>

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் 97 ரன் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி பெற்றது.

நாட்டிங்ஹாமில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட்செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 210 ரன் எடுத்தது.

211 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இங்கிலாந்து அணி, 14 புள்ளி 5 ஓவரில் 113 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

<<<<>>>>

துனீஷியா சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் நிதின் குமார் சின்ஹா — ஸ்பெயினின் **Alejandro** இணை பட்டம் வென்றது.

ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை 7-6, 6-3 என்ற செட் கணக்கில் கஜக்ஸ்தானின் **Grigoriy Lomakin -** இங்கிலாந்தின் **Luca Pow** இணையை வென்றது.

<<<<>>>>

ஆசியக் கோப்பை மகளிர் கால்பந்து போட்டியின் தகுதிச் சுற்று ஆட்டத்தில் இந்தியா - ஈஸ்ட் திமோர் அணியை எதிர்கொள்கிறது.

15 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்தியா வெள்ளிப் பதக்கம் வென்றது.

தாஷ்கண்டில் நடைபெற்ற இப்போட்டியின் இறுதியாட்டத்தில் சீனா தங்கம் வென்றது.

<<<<>>>>

துருக்கியில் நடைபெற்று வரும் சர்வதேச மல்யுத்தப் போட்டியில் **Aman Sehrawat** தங்கப்பதக்கம் வென்றார்.

ஆடவர் 57 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

இப்போட்டியில் 65 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் ரோஹித் வெண்கலப் பதக்கம் வென்றார்.

<<<<>>>>

உலகக் கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டியின் அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

சென்னையில் நடைபெறும் இப்போட்டிகள் நவம்பர் மாதம் 28ஆம் தேதி தொடங்கி டிசம்பர் 10ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

24 நாடுகள் பங்கேற்கும் இப்போட்டியில் இந்தியா பி விரிவில் இடம்பெற்றுள்ளது.

<<<<>>>>

உஸ்பெகிஸ்தானில் நடைபெற்ற சர்வதேச செஸ் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற இந்தியாவின் பிரக்ஞானந்தாவுக்கு தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் சேப்பாக் அணி, மதுரை அணியையும், கோவை அணி – சேலம் அணியையும் வென்றன.

இன்று நடைபெற ஆட்டங்களில் நெல்லை அணி – திருப்பூர் அணியையும், திண்டுக்கல் அணி – திருச்சி அணியையும் எதிர்கொள்கின்றன.

**<<<<The End>>>>**